# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம்!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் தாம்பரத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொருளாளரும், கழக மக்களவைக் குழு தலைவருமான டி.ஆர்.பாலு தலைமையேற்று சிறப்புரையாற்றினார். உடன் கழக தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், மண்டலக் குழுத் தலைவர்கள் காமராஜ், இந்திரன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



பெரம்பலூர் மாவட்டத்தில் கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. தலைமையில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கே.என்.அருண்நேரு.எம்.பி., மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, தூத்துக்குடி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தூத்துக்குடி விவிடி சிக்னல் அருகில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு, ஒன்றிய பா.ஜ.க . அரசிற்கு எதிராக கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டன உரையாற்றினார். உடன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி.மார்கண்டேயன் மற்றும் ஜெகன் பெரியசாமி, அ.பிரம்மசக்தி, ஆனந்தசேகரன் CM.மதியழகன், பை.மூ.ராமஜெயம், காசி விஸ்வநாதன், முருகேசன், ரமேஷ், ஜெஸ்ஸி பொன்ராணி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் முத்துக்கடை பஸ் நிலையத்தில் ஒன்றிய அரசைக் கண்டித்து திமுக சார்பில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத் ரட்சகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநில சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் ஆர்.வினோத் காந்தி, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ. மாவட்ட பொருளாளர் ஏ.வி.சாரதி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வினோத், மாவட்ட மகளிர் அணி செயலாளர் ஜெயந்தி திருமூர்த்தி, ராணிப்பேட்டை நகராட்சி தலைவர் சுஜாதா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டனர்.



நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன்பு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யாத ஒன்றிய அரசைக் கண்டித்து நாமக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட திமுக சார்பில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளரும், மாநிலங்களவை குழு தலைவருமான திருச்சி சிவா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம், கே.பொன்னுசாமி, மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரத்தில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ.தலைமையில்,மாவட்ட ஆட்சியர் வளாகம் அருகே முன்னாள் அமைச்சரும் உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான பொன்.முத்துராமலிங்கம் முன்னிலையிலும் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சுப.தங்கவேலன்,டாக்டர் சுந்தர்ராஜன், வ.சத்தியமூர்த்தி, மக்களவை உறுப்பினர் கே.நவாஸ் கனி, பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் முருகேசன், இன்பா ஏ.என்.ராகு, சுப.த. திவாகர், முருகவேல் மற்றும் மாநில, மாவட்ட, நகர, பேரூர் கழகம் மற்றும் அனைத்து அணி நிர்வாகிகள் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். முடிவில் கே.ஜே.பிரவீன் நன்றியுரை கூறினார்.

